**வெறியிடத்தக்கது**

# இந்திய உச்ச நீதிமன்றம்

**குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு**

**குற்றவியல் மேல்முறையீடு எண் 1497/2022**

**தசரத்பாய் திரிகம்பாய் படேல் ... மேல்முறையீட்டாளர்**

**-எதிர்-**

**ஹிதேஷ் மகேந்திரபாய் படேல் & ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

## தீர்ப்புரை

**மாண்புமிகு நீதியரசர் டாக்டர் தனஞ்சய ஒய் சந்திரசூட்**

1. இந்த மேல்முறையீடானது, குஜராத் உயர் நீதிமன்றத்தின் 12.01.2022 தேதியிடப்பட்ட தீர்ப்புரையிலிருந்து எழுகிறது.1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரை 1881-ஆம் ஆண்டு மாற்றுமுறையாவணங்கள் சட்டம் (சட்டம்) பிரிவு 138-லிருந்து விடுவித்து. கூடுதல் தலைமை குற்றவியல் நடுவரால் வழங்கப்பட்ட 2016-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரைக்கு எதிரான மேல்முறையீட்டை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மையப் பிரச்சினை யாதெனில், பணமாக்கும் நேரத்தில் மதிப்பு மறுக்கப்பட்ட காசோலையானது செலுத்தத்தக்க கடன் தொகையைப் பிரதிபலிக்கவில்லையெனில், அதனை, சட்டப்பிரிவு 138-இன் கீழ் புரியப்பட்ட குற்றமாகக் கருதமுடியுமா? என்பதாகும்.

**சங்கதிகள்:**

2. 2014-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ஆம் தேதியன்று மேல்முறையீட்டாளர், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சட்டத்தின் பிரிவு 138-இன் கீழ் சட்ட அறிவிப்பு அனுப்பினார். முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் 2012-ஆம் ஆண்டு

ஜனவரி திங்கள் 16-ஆம் தேதியன்று மேல்முறையீட்டாளரிடமிருந்து ரூபாய் இருபது இலட்சம் கடனாகப் பெற்று, அக்கடனைத் தீர்க்க, 2014-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் தேதியிடப்பட்ட 877828 என்ற எண்ணிடப்பட்ட காசோலையை மேற்படி தொகைக்கு வழங்கினார் என்று சொல்லப்படுகிறது. மேலும், காசோலையானது 2014-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2-ஆம் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்டபோது போதிய பணமின்மையால் மதிப்பு மறுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.சட்டப்படி செலுத்தத்தக்க கடன் தொகையான ரூ.20,00,000/-ஐ திருப்பிச் செலுத்துமாறு கோரி, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு மேல்முறையீட்டாளர் சட்ட அறிவிப்பு அனுப்பினார்:

> ”எனவே, என்னுடைய கட்சிக்காரருக்கு தங்களால் செலுத்தப்படவேண்டியதும், சட்டப்படி செலுத்தத்தக்க கடன் தொகையானதுமான ரூ.20,00,000/-ஐ குறிப்பாக இவ்வறிவிப்பைப் பெற்ற 15 நாட்களுக்குள்ளாக திருப்பிச் செலுத்துமாறு தங்களை இதன்மூலம் கோருகின்றார்.[...]”

3. 2014-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் தேதியன்று மேல்முறையீட்டாளரின் சட்ட அறிவிப்புக்கு முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் பதில் அறிவிப்பு அனுப்பினார், அதில், அவர் பின்வருமாறு சொல்லியுள்ளார்:

(i) முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரும், மேல்முறையீட்டாளரும் உறவினர்களாவர். மேல்முறையீட்டாளரின் மகன் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரின் சகோதரியை மணந்துள்ளார்;

(ii) மேல்முறையீட்டாளர் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரூபாய் நாற்பது இலட்சம் கடன் கொடுத்தார்.முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர், மூன்று மாதங்களுக்கொருமுறை மேல்முறையீட்டாளருக்கு ரூபாய் ஒரு இலட்சம் காசோலையாகவும், ரூபாய் எண்பதாயிரம் பணமாகவும் செலுத்தவேண்டும் என தரப்பினர்களுக்கிடையே வாய்மொழி உடன்படிக்கையிருந்தது.இரு காசோலைகள் மேல்முறையீட்டாளருக்கு பிணையமாகத் தரப்பட்டன.கடனளிக்கப்பட்ட தொகையானது

முழுமையாகச் செலுத்தப்படும்போது இரு காசோலைகளையும் மேல்முறையீட்டாளர் திருப்பித் தரவேண்டுமென ஒப்புகொள்ளப்பட்டிருந்தது;

(iii) மேல்முறையீட்டாளரின் மகன் எதிர்மேல்முறையீட்டாளரின் சகோதரிக்கு எதிராக மணமுறிவு நடவடிக்கையைத் தொடங்கினார். எனினும், திருமணத்தின்போது அளிக்கப்பட்ட வரதட்சணையானது இன்னமும் மேல்முறையீட்டாளரின் வசமே உள்ளது; மற்றும்

(iv) பிணையமாக வழங்கப்பட்ட காசோலைகள், மேல்முறையீட்டாளரால் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதாகும்.

4. 2014-ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் தேதியன்று மேல்முறையீட்டாளர், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கெதிராக சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றத்திற்காக குற்ற முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்தார். 2014-ஆம் ஆண்டு மே திங்கள் 19-ஆம் தேதி சட்ட அறிவிப்புக்கு 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றொரு பதிலறிவிப்பு அனுப்பினார்.மேற்படி பதிலறிவிப்பின் மூலம், சட்ட அறிவிப்புக்கான முந்தைய பதிலறிவிப்பில் ரூபாய் நாற்பது இலட்சம் கடன் பெற்றதாக ஒப்புக்கொண்டதை, மாற்றியமைத்து ரூபாய் இருபது இலட்சமாக திருத்தம் செய்ய கோரப்பட்டது .

5. ரூபாய் இருபது இலட்சம் கடனைப் பொறுத்தவரையில், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் தனது கடனைப் பகுதியாகத் தீர்க்கும்பொருட்டு 8 ஏப்ரல் 2012 மற்றும் 30 டிசம்பர் 2013 க்கு இடையில் ரூ.4,09,315/- தொகையை மேல்முறையீட்டாளருக்கு செலுத்தியுள்ளார் என்னும் காரணத்தின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றமானது 2016-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் மூலம் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரை சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றத்திலிருந்து விடுவித்தது.பிரித்து செலுத்தப்பட்ட தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| தேதி | தொகை |
|---|---|
| 18.4.2012 | ரூ. 49,315 |
| 5.10.2012 | ரூ.1,20,000 |
| 15.1.2013 | ரூ. 60,000 |
| 10.7.2013 | ரூ.1,20,000 |
| 30.12.2013 | ரூ. 60,000 |
| மொத்தம் | ரூ.4,09,315 |

மேல்முறையீட்டாளர் ரூபாய் இருபது இலட்சம் சட்டப்படி செலுத்தத்தக்க கடன்பட்டிருந்தார் என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டார் என விசாரணை நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது:

"எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவர் உள்ளபடியே செலுத்தவேண்டிய தொகையிலிருந்து ரூ.4,09,315/-ஐ செலுத்தியுள்ளார் என்பதை வாதியின் முறையீடு நிரூபித்தது.அன்றைய தினம் வாதி சட்டப்படியான தொகையான ரூ.20,00,000/-ஐ வசூலிக்க அத்தொகையை வங்கியில் வைப்பீடு செய்தார். அச்சங்கதியை நிரூபிக்க அரசுத்தரப்பு தவறிவிட்டதாக நீதிமன்றம் நம்புகிறது."

6. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கெதிராக மேல்முறையீட்டாளர் குஜராத் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையிட்டார்.19 மே 2014-ஆம் தேதியிடப்பட்ட திருத்தப்பட்ட பதிலைக் கோப்புக்கு கொண்டுவரக் கோரி, முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் 10 அக்டோபர் 2019-ஆம் தேதியன்று குஜராத் உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பித்தார்.கூடுதல் சான்றைக் கோப்புக்கு கொண்டுவர குஜராத் உயர் நீதிமன்றமானது 11 அக்டோபர் 2018-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் விண்ணப்பத்தை அனுமதித்தது.உயர் நீதிமன்றமானது 12 ஜனவரி 2022-ஆம் தேதியிடப்பட்ட தன்னுடைய உத்தரவின் மூலம் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரை விடுவிக்கும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உறுதி செய்து, மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தது.மேல்முறையீட்டாளருக்கு முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் கடன்பட்டிருந்த தொகையின் ஒரு பகுதியானது செலுத்தப்பட்டுவிட்டது, ஆதலால் சட்டப்பிரிவு 138-இன் கீழ் அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பு செல்லத்தக்கதல்ல என்னும் விசாரணை நீதிமன்றத்தால் முடிவுகாணப்பட்ட சங்கதியை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. ஆய்வின்போது பின்வரும் காண்முடிவுகள் பதியப்பட்டன:

(i) முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் தன்னுடைய கணக்கில் ரூ.4,09,315/-ஐ செலுத்தினார் என மேல்முறையீட்டாளர் தன்னுடைய குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்;

(ii) காசோலையில் நிரப்பப்பட்ட தொகையானது, காசோலை வழங்குபவரால் காசோலை பெறுபவருக்குச் செலுத்தவேண்டிய கடன்தொகை அல்லது கடப்பாடாகும் என்னும் சட்ட அனுமானம் உள்ளது. முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் செலுத்தப்பட்ட பகுதித் தொகையானது, மேல்முறையீட்டாளரால் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பில் பிரதிபலித்திருக்கவேண்டும். காசோலையிலிருந்த தொகையானது, மேல்முறையீட்டாளருக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகையைவிட கூடுதலானதாகும்.ஆதலால், சட்டப்பிரிவு 138-இன் கீழ் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பானது செல்லத்தக்கதல்ல.

அவ்வறிவிப்பானது செலுத்தப்பட்ட பகுதித் தொகையை அங்கீகரிக்காததால், அது ஒரு முழு விபரமற்ற அறிவிப்பாகும்; மற்றும்

(iii) காசோலை, மேல்முறையீட்டாளரால் வழங்கப்பட்ட கடன் தொகைக்கான பிணையமாகும். ஏற்கெனவே செலுத்தப்பட்ட பகுதி தொகையை அங்கீகரிக்காமல் தேதியிடப்படாத காசோலையானது வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டது.

**பணிந்துரைகள்:**

7. மேல்முறையீட்டாளர் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர் திரு. மெஹ்மூத் உமர் ஃபரூக்கி பணிந்துரைத்ததாவது:

(i) ரூபாய் இருபது இலட்சம் கடனைத் தீர்க்கும்பொருட்டு ரூ.4,09,315/- செலுத்தப்பட்டதைத் காட்டுவதற்குப் பதிவு எதுவும் இல்லை;

(ii) ரூ.4,09,315/- செலுத்தப்பட்டது காசோலை வழங்கப்படுவதற்கு முன்பானதாகும்; மற்றும்

(iii) 2014-ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ஆம் தேதியன்று சட்ட அறிவிப்பு முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டும் அவர் தொகை எதையும் செலுத்தவில்லை.

8. முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரின் தரப்பில் முன்னிலையான மூத்த வழக்குரைஞர் திரு. நகுல் திவான் வாதிட்டதாவது:

(i) சட்டப்பிரிவு 138-இல் பயன்படுத்தப்பட்டுள்ள 'கடன் அல்லது பிற கடப்பாடு' என்னும் சொல், 'சட்டப்படி செலுத்தத்தக்க கடன் அல்லது பிற கடப்பாடு' என்பதைக் குறிப்பதாக விளக்கக்கூறில் வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, சட்ட அறிவிப்பில் கோரப்படுவது, சட்டப்படி செலுத்தத்தக்க தொகையாகத்தான் இருக்கவேண்டும்;

(ii) கடனாளி கடனின் ஒரு பகுதியை செலுத்தியிருந்து, சட்டப்பிரிவு 56-இன் கீழ் பகுதித் தொகை செலுத்தியதற்கான மேற்குறிப்பின்றி காசோலையின் மொத்தத் தொகையையும் செலுத்தக் கோரி விடுக்கப்படும் சட்ட அறிவிப்பானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல; மற்றும்(iii) முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் கடன் தொகையில் ஒரு பகுதியைச் செலுத்தியிருந்தால், அந்தப் பகுதித் தொகையை கழிக்காமல் அல்லது மேற்குறிப்பிடாமல் அசல் தொகையைக் காட்டுகின்ற காசோலை மதிப்பு மறுக்கப்பட்டிருக்குமெனில், மேல்முறையீட்டாளர் நடவடிக்கை எதையும் எடுக்கமுடியாது.

## பகுப்பாய்வு:

9. எதிரெதிர் வாதங்கள் எங்கள் பரிசீலனைக்கு வந்தன. சட்டப்பிரிவு 138 கீழ்க்காணுமாறு தெரிவிக்கிறது:

”138. கணக்கு நிதியில் போதிய நிதியில்லாமை முதலான காரணத்திற்காக காசோலை மதிப்பு மறுக்கப்படுதல்.-

ஒருவரால் வங்கியாளரிடம் வைத்துவரப்படுகிற ஒரு கணக்கில் இருந்து, பெறப்படுவதற்கான காசோலை எதுவும், மற்றொருவருக்கு அவரால் செலுத்தப்பட உள்ள தொகைக்காக அந்தக் கணக்கில் இருந்து, கடன் எதனையும் முழுவதுமாக அல்லது பகுதியாகத் தீர்ப்பதற்காக அல்லது பிற கடப்பாட்டிற்காக எழுதப்படுகிறவிடத்து, வங்கியால் அது செலுத்தப்படாது, அந்தக் காசோலையினை மதிப்பதற்கான போதிய தொகையாக வரவு இல்லை என்னும் காரணத்திற்காக அல்லது வங்கியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றினால் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்ட தொகைக்குக் கூடுதலாக இருக்கிற காரணத்தால், அது திருப்பியனுப்பப்படுகிறவிடத்து, அவர், ஒரு குற்றச்செயல் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் ஏதேனும் பிற வகைமுறைகளுக்குக் குந்தகமின்றி [இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்கு] சிறைத்தண்டனையோ அல்லது காசோலைத் தொகைக்கு இரண்டு மடங்கான தொகைவரை போகலாகிற பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்;

வரம்புரையாக:- இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும்,-

(அ) அந்தக் காசோலையானது, அது எழுதப்பட்ட தேதியிலிருந்து, ஆறு மாத காலத்திற்குள் அல்லது அது செல்லத்தக்க காலத்திற்குள் இவற்றில் எது முந்தியதோ அதற்குள் அளிக்கப்பட்டிருந்தாலன்றி,

(ஆ) ஒரு காசோலையின் செலுத்தப்படுநர் அல்லது நேர்வுக்கேற்ப முறைப்படிக் கைக்கொண்டிருப்பவர், அந்தக் காசோலையினை வரைபவருக்கு, சொல்லப்பட்ட பணத்தொகைக்காக, எழுத்துவடிவிலான அறிவிப்பு ஒன்றினை அளித்து செலுத்துமாறு கோரிக்கை செய்யும்போது, வங்கியிலிருந்து செலுத்தப்படாது காசோலை திரும்பி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தகவல் பெற்றதிலிருந்து [முப்பது நாட்களுக்குள்] செய்யப்படுமானால்; மற்றும்

(இ) காசோலை செலுத்தப்படுபவருக்கு அல்லது நேர்வுக்கேற்ப முறைப்படிக் கைக்கொண்டிருப்பவருக்கு, காசோலையை வரைபவர், சொல்லப்பட்ட அறிக்கை பெறப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தத் தவறியிருந்தாலன்றி, பொருந்துதல் ஆகாது.

விளக்கம்:- இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, "கடன் அல்லது பிற கடப்பாடு" என்பது, சட்டப்படி செலுத்தத்தக்க கடன் அல்லது பிற கடப்பாடு என்று பொருள்படும்." (வலியுறுத்திக் கூறப்பட்டது)

10. சட்டப்பிரிவு 138-இன் கீழ் பின்வரும் ஆக்கக்கூறுகள் நிறைவு செய்யப்படுமெனில், ஒரு காசோலையை வரைபவர் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுகிறார்:

(i) மற்றொருவருக்கு பணமாக ஏதேனும் தொகை தருவதற்காக காசோலையானது வரையப்படுகிறது;

(ii) காசோலையானது ஏதேனும் கடன் அல்லது பிற கடப்பாட்டை 'முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ' தீர்ப்பதற்காக வரையப்படுகிறது. 'கடன் அல்லது பிற கடப்பாடு' என்பது சட்டப்படி செலுத்தத்தக்க கடன் அல்லது பிற கடப்பாட்டைக் குறிக்கிறது; மற்றும்

(iii) காசோலையானது, போதிய பணமின்மையால் வங்கியால் திருப்பி அனுப்பப்படுகிறது.

வரம்புரையிலுள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டாலன்றி, குற்றமானது புரியப்பட்டதாகக் கருதப்படுவதில்லை. வரம்புரையிலுள்ள நிபந்தனைகள் பின்வருமாறு:

(i) காசோலையானது வரையப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாகவோ அல்லது அது செல்லுபடியாகும் காலத்திற்குள்ளாகவோ வங்கியில் சமர்ப்பிக்கப்படவேண்டும்;

(ii) காசோலையை வைத்திருப்பவர், காசோலையானது மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டது என்னும் அறிவிப்பை வங்கியிலிருந்து பெற்ற முப்பது நாட்களுக்குள்ளாக 'சொல்லப்பட்ட தொகையை' செலுத்துமாறு எழுத்துப்பூர்வமான அறிவிப்பின் மூலம் அக்காசோலையை வரைந்தவரிடம் கோரவேண்டும்; மற்றும்

(iii) காசோலையை வரைந்தவர், அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள்ளாக, 'சொல்லப்பட்ட தொகையை' செலுத்தத் தவறவேண்டும்.

11. முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரின் முதன்மையான வாதம் யாதெனில், காசோலையானது பணமாக்கப்படுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட நாளன்று, மேல்முறையீட்டாளருக்கு செலுத்தத்தக்க தொகையானது, காசோலையில் எழுதப்பட்ட தொகையைவிட குறைவானதாக இருந்ததால், சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றம் புரியப்படவில்லை என்பதாகும். இந்நீதிமன்றத்தின் முன்பான வினா யாதெனில், காசோலையானது வரையப்பட்ட பின்னர், ஆனால், அக்காசோலையானது பணமாக்கப்படுவதற்கு முன்னர் காசோலையை வரைபவர், கடன் அல்லது பிற கடப்பாடு

தொடர்பாக ஒரு பகுதித் தொகையைச் செலுத்துகிறபோதும், முழுத் தொகையைப் பிரதிபலிக்கின்ற காசோலையின் மதிப்பு மறுக்கப்படுவதற்காக, சட்டப்பிரிவு 138 ஈர்க்கப்படுகிறதா? என்பதாகும்.

12. பின்தேதியிடப்பட்ட காசோலை வழங்கப்பட்ட பின்னர், ஒரு பகுதித் தொகை செலுத்தப்படும்போது, சட்டப்படி செலுத்தத்தக்க கடன் அல்லது பிற கடப்பாடு, காசோலையானது சமர்ப்பிக்கப்பட்ட நாளன்று, காசோலையில் பிரதிபலிக்கும் தொகையைவிடவும் குறைவானதாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.கடன் கொடுக்கப்பட்ட தேதிக்கும் காசோலை பணமாக்கப்படுவதற்கு சமர்ப்பிக்கப்படும் தேதிக்கும் இடையில், பகுதித் தொகையோ அல்லது முழுத் தொகையோ செலுத்தப்பட்டிருக்கலாம்.இவ்வாறாக, பின்தேதியிடப்பட்டு வழங்கப்படும் காசோலைகள் மற்றும் பிணைய நோக்கங்களுக்காக வழங்கப்படும் காசோலைகள் என்பனவற்றுக்கு இந்நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட, நாங்கள் குறிப்பிடும் சட்டமானது மிகவும் தீர்வுக்குரியதாகும். இண்டஸ் ஏர்வேஸ் பிரைவேட் லிமிடெட் -எதிர்- மேக்னம் ஏவியேஷன் பிரைவேட் லிமிடெட், 2014 (1) எம்.டபிள்யூ.என். (கிரிமினல்) டி.சி.சி. 186 (எஸ்.சி.) : 2014 (3) சி.டி.சி. 721 (எஸ்.சி.) : 2014 (12) எஸ்.சி.சி. 539 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வின் முன்பாக எழுப்பப்பட்ட பிரச்சினை யாதெனில், 'முன் பணத்திற்கு' பின்தேதியிடப்பட்ட காசோலைகள் வழங்கப்பட்டு, கொள்முதல் உத்தரவு பின்னிட்டு இரத்து செய்யப்படுமெனில், அவற்றின் மதிப்பு மறுக்கப்படுதல் சட்டப்பிரிவு 138-கீழ் அடங்குமா? என்பதாகும். காசோலையானது வரையப்படும் நாளன்று சட்டப்படி செலுத்தத்தக்க கடன் இருந்தால் மட்டுமே, பிரிவு 138 பொருந்துமெனத் தீர்மானிக்கப்பட்டது. சம்பெல்லி சத்யநாராயண ராவ் -எதிர்- இந்தியன் ரெனியூவபுள் எனர்ஜி டெவலெப்மென்ட் ஏஜென்சி லிமிடெட், 2016 (3) எம்.டபிள்யூ.என். (கிரிமினல்) டி.சி.சி. 56 (எஸ்.சி.) : 2016 (5) சி.டி.சி. 563 (எஸ்.சி.) : 2016 (10) எஸ்.சி.சி. 458 என்ற வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர் மின் திட்ட அமைப்புக்காக கடன் வழங்கினார், அதற்கு பிணையமாக பின்தேதியிடப்பட்ட காசோலைகள் வழங்கப்பட்டன. காசோலைகள் மதிப்பு மறுக்கப்பட்டு, சட்டப்பிரிவு 138-இன் கீழ் முறையிடப்பட்டது. 2 (2014) 12 எஸ்.சி.சி. 5393 (2016) 10 எஸ்.சி.சி. 458

மேற்படி இண்டஸ் ஏர்வேஸ் என்ற வழக்கை வேறுபடுத்தி, காசோலையில் குறிப்பிடப்பட்ட தேதியில் சட்டப்படி செலுத்தத்தக்க கடன் இருந்ததா? என்பதே சட்டப்பிரிவு 138-ஐ பயன்டுத்துவதற்கான ஆய்வாகும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு உடன்பாடான பதிலென்றால், சட்டப்பிரிவு 138-இன் வகையங்கள் ஈர்க்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டதுஸ்ரீபதி சிங் -எதிர்- ஜார்க்கண்ட் மாநில அரசு, 2021 (3) எம்.டபிள்யூ.என். (கிரிமினல்) டி.சி.சி. 113 (எஸ்.சி.) : 2021 எஸ்.சி.சி. ஆன்லைன் எஸ்.சி. 1002 என்ற வழக்கில் காசோலை பிணையமாக வழங்கப்பட்டாலும், கடனானது உரிய தேதிக்கு முன்பாக எம்முறையிலும் திருப்பிச் செலுத்தப்படவில்லையென்றாலும் அல்லது கடனைத் திருப்பிச் செலுத்துவதைத் தள்ளிப்போட தரப்பினர்களுக்கிடையில் புரிந்துணர்வோ அல்லது உடன்படிக்கையோ இல்லையென்றாலும், காசோலை சமர்ப்பிக்கப்படுவதற்காக முதிர்ச்சியுறும் என இந்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது:

> ”17. நிதி பரிவர்த்தனையைத் தொடர்ந்து பிணையமாக வழங்கப்படும் காசோலையானது, ஒவ்வொரு சூழ்நிலையிலும் மதிப்பற்ற காகிதத் துண்டாகக் கருதப்படமுடியாது.'பிணையம்' என்பதற்கு பாதுகாப்பான நிலையில் இருத்தல் என்பதே உண்மையான பொருளாகும் மற்றும் கடனுக்காகக் கொடுக்கப்படும் பிணையம் என்பது அதைத் திருப்பிச் செலுத்துதலுக்கு ஈடாக எதையேனும் தருவதாகும்அது, பரிவர்த்தனைக்கு கட்டுப்பட்ட தரப்பினர்கள் ஒரு கடப்பாட்டை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்காக தரப்படுகிறது அல்லது வைப்பீடு செய்யப்படுகிறது அல்லது அடகு வைக்கப்படுகிறது.
>
> ஒரு பரிவர்த்தனையில் கடன் வழங்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் தொகையைத் திருப்பிச் செலுத்த கடன் பெற்றவர் ஒப்புக்கொண்டு, அத்தகைய திருப்பிச் செலுத்துதலை உறுதி செய்ய பிணையமாக காசோலை வழங்கினாலும், கடன் தொகை திருப்பிச் செலுத்துவதற்குரிய தேதிக்கு முன்னர், எம்முறையிலும் செலுத்தப்படவில்லை என்றாலும் அல்லது தொகை செலுத்துதலைத் தள்ளிப்போட தரப்பினர்களுக்கிடையில் வேறேதும் புரிந்துணர்வோ அல்லது உடன்படிக்கையோ இல்லையென்றாலும், பிணையமாகக் கொடுக்கப்பட்ட காசோலையானது சமர்ப்பிக்கப்படுவதற்கு முதிர்ச்சியடைவதோடு, காசோலை பெற்றவர் அதனை சமர்ப்பிப்பதற்குரியவராவார்.

அவ்வாறு சமர்ப்பிப்பதன்பேரில் அது மதிப்பு மறுக்கப்படுமெனில், மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 138 மற்றும் பிற வகையங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளைவுகள் எழும். 18. ஒரு காசோலையானது வழங்கப்பட்டு, திருப்பிச் செலுத்துவதற்கான காலம் நிருணயிக்கப்பட்டு அத்தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான 'பிணையமாக' கருதப்படுகிறபோது, கடன் அல்லது தவணைக்கு 'பிணையமாக' வழங்கப்படும் அத்தகைய காசோலையானது, முதிர்ச்சியுறும் முன்னர், பிணையமாக வழங்கப்படும் காசோலையானது சமர்ப்பிக்கப்படக்கூடாது என்பதையே அவையனைத்தும் உறுதிசெய்கின்றன.

**மேலும், கடன் பெற்றவர், கடன் தொகையை அல்லது அத்தகைய நிதிக் கடப்பாடு வேறு ஏதேனும் முறையில் திருப்பிச் செலுத்தும் விருப்புரிமைக் கொண்டு, அம்முறையில் கொடுக்கவேண்டிய கடன் தொகை கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்திற்குள் கொடுக்கப்பட்டுவிட்டால், பிணையமாக வழங்கப்பட்ட காசோலை அதன்பின்னர் சமர்ப்பிக்கப்படமுடியாது. எனவே, முன்னதாக கடனைத் தீர்த்தல் அல்லது மாறுபட்ட சூழ்நிலையின் காரணமாக தரப்பினர்களுக்கிடையே புரிதல் இருப்பது. பிணையமாக வழங்கப்பட்ட காசோலையைச் சமர்ப்பிக்கக்கூடாது என்பதற்கான இன்றியமையாதக் கூறாகும்.**

இவையே மாற்றுமுறையாவணங்கள் சட்டப்பிரிவு 138-இன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையில், காசோலை வரைபவருக்குள்ள தற்காப்பு வாதங்களாகும். எனவே, பிணையமாக வழங்கப்படும் காசோலையானது, காசோலையைப் பெற்றவரால் ஒருபோதும் சமர்ப்பிக்கப்படமுடியாது என்பதற்கு கண்டிப்பான விதியேதுமில்லை.அவ்வாறான புரிதல் இருந்தால், காசோலையும் 'கோரும்போது வழங்கும் கடனுறுதிசீட்டு'- போல் மாறிவிடும், மேலும் இது அனைத்து சூழ்நிலைகளிலும் தொகையை வசூலிக்கும் ஓர் உரிமையியல் நடவடிக்கையாகவே இருக்கும், இது சட்டத்தின் உட்கருத்தல்ல.ஒரு காசோலை, 'பிணையமாக" வழங்கப்படுகிறபோது, அதிலிருந்து ஏற்படும் விளைவுகளும் காசோலை வரைபவருக்குத் தெரிந்திருக்க வேண்டும், மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளில், காசோலை சமர்ப்பிக்கப்பட்டு, மதிப்பு மறுக்கப்படுமெனில், உள்ளபடியான

சூழ்நிலைக்கேற்ப பணத்தை வசூலிக்க உரிமையியல் நடவடிக்கையெடுப்பதும் அல்லது தண்டனைக்காக குற்றவியல் நடவடிக்கையெடுப்பதும் காசோலையை பெற்றவரின் விருப்பத்திற்குரியதாகும். ஆனால், எந்த நேர்விலும், வழக்கின் தன்மையைக் குறித்து அதிகாரத்துடன் முடிவெடுக்கவேண்டியது காசோலை வரைபரல்லர்." (வலியுறுத்திக் கூறப்பட்டது)

மேற்படி முன்தீர்ப்பு ஆய்வின் அடிப்படையில் கீழ்க்காணும் கோட்பாடுகள் வெளியிடப்பட்டன:

(i) கடனாளி, குறிப்பிட்ட காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்த ஒப்புக்கொண்டு, பிணையமாக காசோலை வழங்கிவிட்டு, உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பிச்செலுத்த தவறும்போது, காசோலையானது சமர்ப்பிக்கப்படுவதற்கு முதிர்ச்சியுறுகிறது. காசோலையானது பணமாக்கப்பட கடன்கொடுத்தவரால் கோரப்பட்டு, அது மதிப்பு மறுக்கப்படுகிறபோது, சட்டப்பிரிவு 138-ஆனது ஈர்க்கப்படும்;

(ii) எனினும், காசோலை வரையப்படும் நாளுக்கும் காசோலை முதிர்ச்சியுறும் நாளுக்கும் இடையே காசோலை பிணையமாக வழங்கப்படுகிறபோது, கடனானது ஏதேனும் முறையில் திருப்பிச் செலுத்தப்படமுடியும். கடனானது உரிய தேதிக்குள் வேறேதேனும் முறையில் திருப்பிச் செலுத்தப்படாதவிடத்தே, அக்காசோலை சமர்ப்பிக்கப்படுவதற்கு முதிர்ச்சியுறுகிறது; மற்றும்

(iii) கடனானது உரிய தேதிக்குள் தீர்க்கப்பட்டுவிட்டால், அல்லது 'மாறுபட்ட சூழ்நிலை' ஏற்படுகிறதென்றால் பணமாக்கப்படுவதற்காக காசோலையானது சமர்ப்பிக்கப்படக்கூடாது.

13. சுனில் தோடி -எதிர்- குஜராத் மாநில அரசு, எம்.டபிள்யூ.என். (கிரிமினல்) டி.சி.சி. 167 (எஸ்.சி.), குற்றவியல் மேல்முறையீடு எண் 1446/2021 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வு, 'கடன் அல்லது பிற கடப்பாடு" என்னும் சொற்றொடரின் பொருளை விளக்கியது. இச்சொற்றொடர், 'தற்போதைய கடப்பாட்டின் காரணமாக, எதிர்காலத்தில் ஒரு தொகையானது செலுத்தப்பட

உறுதியளிக்கப்படுகிறது' என்னும் பொருளைத் தருகிறது எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. கடன் பெறப்பட்ட பின்னர் வழங்கப்படும் பின்தேதியிடப்பட்ட காசோலை, 'கடன்' என்னும் பொருளுக்குள் அடங்கும் என இந்நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. காசோலை வரையப்பட்ட பின்னரும் ஆனால், அது பணமாக்கப்படுவதற்காக சமர்ப்பிக்கப்படும் முன்னரும் பெறப்படும் கடனைக் குறித்து பிரிவு 138 உள்ளடக்குகிறது என நீதிமன்றம் தீர்மானித்தது. இதன் தொடர்பாக கருத்துரைக்கப்பட்டதாவது:

> ”26. வணிகப் பரிவர்த்தனைக்காக காசோலைகளின் ஏற்கும் தன்மையை அதிகரித்து, மாற்றுமுறையாவணங்களின் செயல்திறனில் நம்பிக்கை விதைப்பதே மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் நோக்கமாகும்.காசோலை வரையப்பட்ட பின்னர், ஆனால், அது பணமாக்கப்படுவதற்கு முன்னர் பெறப்படும் கடனை விலக்கும்வகையில் வகைமுறைக்கு பொருள்விளக்கம் அளிக்கப்படுமெனில், வகைமுறையின் நோக்கமே பயனற்றதாகிவிடும். இண்டஸ் ஏர்வேஸ் என்ற வழக்கில் முன்தொகை செலுத்தப்பட்டும், கொள்முதல் உடன்படிக்கை இரத்துசெய்யப்பட்டதால், அங்கு கடன் பெறுவதற்கான சந்தர்ப்பமில்லை.'கடன் அல்லது பிற கடப்பாடு' என்பது காசோலை வரையப்படும் நாளன்று உள்ள கடனை மட்டும் உள்ளடக்குவதாகப் பொருள்படுத்தப்படுமானால், சட்டப்பிரிவு 138-இன் உண்மையான நோக்கம் நிறைவேற்றப்படாது. மேலும், நாடாளுமன்றம், 'கடன் அல்லது பிற கடப்பாடு' என்னும் சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளது.'அல்லது பிற கடப்பாடு என்னும் சொற்றொடர், அதற்கே உரிய பொருளைக் கொண்டிருக்கவேண்டும். சட்டமானது அதற்கு இருவேறான சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளது.'அல்லது பிற கடப்பாடு' என்னும் சொற்றொடர், 'ஒரு கடன்' என்னும் சொற்றொடரைவிடவும் பரந்த பொருளுடையது. அதனைப் பிந்தையதோடு சமன்படுத்தக்கூடாது. தற்போதைய வழக்கில், மிக அண்மையில் மின் வழங்கலை ஆரம்பிப்பதை முன்னிட்டு காசோலை வழங்கப்பட்டது. வணிக நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்படும்

காசோலை, வணிக தொழில்களை மேற்கொள்வதன் தொடர்புடையதாகவே புரிந்துகொள்ளப்படவேண்டும். மிக விரைவிலேயே மின்சாரம் வழங்கலைத் தொடர்ந்து காசோலை வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட மின்சாரத்துக்கு கொடுக்கப்படவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு நிறுமத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாட்டின் அடிப்படையில் காசோலை வழங்கப்படவில்லை என முடிவு செய்தால், அது வணிக நடவடிக்கைகளில் சாதகமற்ற விளைவை ஏற்படுத்திவிடும். நிறுமம் ஒரு திருப்திகரமான கடன் சான்றிதழை வழங்காமல், மின்சாரத்தைப் பயன்படுத்திவந்தால், நிலுவைத் தொகையை நேர்செய்யும்பொருட்டு காசோலைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவையாகின்றன."

14. பிணையமாக வழங்கப்படும் பின்தேதியிடப்பட்ட காசோலை மாற்றுமுறையாவணங்கள் சட்டப்பிரிவு 138-இன் வரம்புக்குள் வருமா? என்பதன் அடிப்படையிலான பெரிதளவிலான ஆய்வு காலத்தின் தொடர்புடைமை மீதே சுழல்கிறது என்பதை (மேற்படி) இண்டஸ் ஏர்வேஸ் வழக்கிலிருந்து (மேற்படி) சுனில் தோடி வழக்கு வரையிலான தீர்ப்புரைகள் தெரிவிக்கின்றன. (மேற்படி) இண்டஸ் ஏர்வேஸ் என்ற வழக்கில், பிரிவு 138-இன் கீழ் குற்றம் புரிந்ததைக் கொண்டு வருவதற்காக, காசோலை வழங்கப்பட்ட நாளன்று கடன் கண்டிப்பாக இருந்திருக்கவேண்டும் என இந்நீதிமன்றம் தீர்மானித்ததுஎனினும், பிந்தைய தீர்ப்புரைகள், பின்தேதியிடப்பட்ட காசோலைகளின் மதிப்பு மறுப்பு என்பதன் அடிப்படையில் சட்டப்பிரிவு 138-இன் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கையில், மிகவும் நுட்பவேறுபாடான நிலைப்பாட்டைப் பின்பற்றின. காசோலையில் குறிப்பிடப்படும் நாளன்று அதாவது, காசோலை முதிர்ச்சியுறும் நாளன்று சட்டப்படி செலுத்தத்தக்க கடன் இருக்கவேண்டும் என்பதை இந்நீதிமன்றம், (மேற்படி) சம்பெல்லி சத்ய நாராயணராவ் வழக்கிலிருந்து தொடர்ந்து தீர்மானித்துவருகிறது.

15. என்.இ.பீ.சி. மைக்கான் லிமிடெட் -எதிர்- மேக்னா லீசிங் லிமிடெட், ஏ.ஐ.ஆர். 1995 எஸ்.சி. 1952 என்ற வழக்கில் பரிகாரத்தை முன்னெடுத்து, பாதிப்பைத் தடுப்பதே சட்டமியற்றுதலின் நோக்கம் என்பதைக் கருத்திற்கொண்டு, நீதிமன்றங்கள், சட்டப்பிரிவு

138-க்கு பொருள்விளக்கம் அளிக்கவேண்டுமென இந்நீதிமன்றம் தீர்மானித்தது. பொதுவாக இச்சட்டத்தின் நோக்கமும், குறிப்பாக பிரிவு 138-இன் நோக்கமும் என்னவென்றால், வணிக நடவடிக்கைகளுக்கான காசோலைகளை ஏற்றுக்கொள்ளும் தன்மையை அதிகரித்து, மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் செயல்திறனில் நம்பிக்கை விதைப்பதாகும்.சுனில் தோடி -எதிர்- குஜராத் மாநில அரசு, 2021 (3) எம்.டபிள்யு.என். (கிரிமினல்) டி.சி.சி. 167 (எஸ்.சி.), குற்றவியல் மேல்முறையீடு எண் 1446/2021-இல், பிரிவு 138 காசோலை மதிப்பு மறுக்கப்படுவதை குற்றமாக்குகிறது.இது, கிடைக்ககூடிய உரிமையியல் பரிகாரத்துடன் கூடுதல் பரிகாரமாகும். காசோலைகள் மதிப்பு மறுக்கப்படுவதை குற்றமாக்குவதன் மூலம், மாற்றுமுறையாவணத்தை வரைபவரின் தரப்பிலான நேர்மையற்ற தன்மையைத் தடுக்க சட்டம் எண்ணியது.எலெக்ட்ரானிக்ஸ் டிரேட் & டெக்னாலஜி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், செகந்தராபாத் -எதிர்- இந்தியன் டெக்னாலஜிஸ்ட்ஸ் & என்ஜினியர்ஸ் (எலெக்ட்ரானிக்ஸ்) பிரைவேட் லிமிடெட், 1996 (1) சி.டி.சி. 193 (எஸ்.சி.) : 1996 (3) கிரைம்ஸ் 82 (எஸ்.சி.) என்ற வழக்கில், பிரிவு 138-இன் பொருள்விளக்கமானது, காசோலை பெற்றவரின் நேர்மையின்மையையும் அனுமதிக்கவில்லை. காசோலை வரைபவர் எதிர்காலத்தில் கடனைச் செலுத்தத் தவறும்பட்சத்தில், காசோலை பெற்றவர் அக்காசோலையை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக பிணையமாக காசோலை வழங்கப்படுகிறது.எனவே, காசோலை பணமாக்கப்படுவதற்கு முன்னர், காசோலையில் பிரதிபலிக்கும் தொகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செலுத்தப்படும் என்னும் எண்ணத்துடன் காசோலைகள் பிணையமாக வழங்கப்பட்டு, பெறப்படுகின்றன.

16. பின்தேதியிடப்பட்ட காசோலைகள் குறித்த இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளை, பிரிவு 138-இன் நோக்கத்துடன் பார்க்கும்போது, காசோலை, முதிர்ச்சியுறும் நாளன்று 'சட்டப்படி செலுத்தத்தக்க கடன் அல்லது பிற கடப்பாட்டைக் குறிப்பிடுமெனில், அந்த வகையத்தின் கீழான குற்றம் எழுகிறதென்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.காசோலை பணமாக்கப்பட கோரப்படுகிறபோது, அது மதிப்பு மறுக்கப்படுவதால் பிரிவு 138-இன் கீழான குற்றம் எழுகிறது.ஒரு பின்தேதியிடப்பட்ட

காசோலை வரையப்படும் சமயத்தில், அது சட்டப்படி செலுத்ததத்தக்க கடனைப் பிரதிபலிப்பதாக வரையப்பட்டிருக்கலாம் என்றாலும், குற்றமானது ஈர்க்கப்படுவதற்காக, காசோலை, பணமாக்கப்படும் சமயத்தில் சட்டப்படி செலுத்தத்தக்க கடனைப் பிரதிபலிப்பதாய் இருக்கவேண்டும்.காசோலையில் உள்ள தொகை, முதிர்ச்சியுறும் அல்லது பணமாக்கப்படும் சமயத்தில் சட்டப்படி செலுத்தத்தக்க கடனைப் பிரதிபலிக்கவில்லை என்பதாக சூழ்நிலையில் முக்கிய மாற்றம் ஏதும் நிகழ்ந்திருப்பின், பிரிவு 138-இன் கீழான குற்றம் எழாது.

17. காசோலை, முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் 17 மார்ச் 2014-ஆம் தேதியன்று வழங்கப்பட்டது. எனினும், தொகை ரூ.4,09,315/-ஆனது 8 ஏப்ரல் 2012க்கும் 30 டிசம்பர் 2013-க்குமிடையில் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரிடமிருந்து பெறப்பட்டது என்றும் மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.காசோலை வழங்கப்படும் முன்பே தொகை செலுத்தப்பட்டுவிட்டதால், அது கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான பகுதித் தொகை செலுத்துதலாகக் கருதப்படமுடியாது என வாதிடப்பட்டது.

18. 2016-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் தேதியன்று நடத்தப்பட்ட மேல்முறையீட்டாளரின் குறுக்கு விசாரணையில், அவர், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரூபாய் இருபது இலட்சம் கடன் வழங்கியதற்கு பற்றுச் சீட்டு எதையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை உறுதிபட குறிப்பிட்டுள்ளார்.'காசோலைக்கு, மேல் காசோலை' வழங்கப்பட்டதென மேல்முறையீட்டாளர் தெரிவித்தார்.

குறுக்கு விசாரணையின் தொடர்புடைய பகுதி கீழே எடுத்துத்தரப்படுகிறது:

"[...] நான் 2012-13 கணக்கு வைப்பிற்குரிய ஆண்டுக்கான வருமான வரி கணக்கு அறிக்கையைக் கொடுத்துள்ளேன். நான் மேற்படி வருமான வரி கணக்கு அறிக்கையில் ரூபாய் இருபது இலட்சம் பரிவர்த்தனையைத் தெரிவித்துள்ளேன் என்றால் அது உண்மையே. நான், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கொடுத்த ரூபாய் இருபது இலட்சத்திற்கு கணக்கு வைப்பிற்குரிய ஆண்டுக்கான வருமான வரி

கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக உள்ளேன். நான் பற்றுச்சீட்டில் ஒப்புகையளிக்கவில்லை. நான் மேற்படி காசோலைக்கு மேல் காசோலை கொடுத்துள்ளேன், ஆனால் பற்றுச்சீட்டு எதையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது உண்மையாகும்." (வலியுறுத்திக் கூறப்பட்டது)

19. சட்டப்பிரிவு 145-இன் கீழ் பதியப்பட்ட சான்றுரையில், 2012-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 16-ஆம் தேதியன்று முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரூபாய் இருபது இலட்சம் கடன் வழங்கியதாகவும், எதிர்மேல்முறையீட்டாளர் ரூபாய் இருபது இலட்சத்திற்கு காசோலை வழங்கி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியன்று அதனை வைப்பீடு செய்யலாம் எனக் கூறியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்:

"இவ்வழக்கின் வாதியும் பிரதிவாதியும் சம்மந்திபோல் ஒரு குடும்ப உறவினராக இருந்து வந்ததால், அவர் வாதியின் தேவைக்கேற்ப16.1.2012-ஆம் தேதியன்று ஒரு தொகை கொடுத்துள்ளார். இவ்வழக்கில், வாதியால் கொடுக்கப்பட்ட தொகையான ரூ.20,00,000/-ஐ கொடுப்பதற்கான, அவருடைய வங்கியான அகமதாபாத் பாரத ஸ்டேட் வங்கி, ஆடா கார்டன், பிரக்லாத் நகர் கிளையின் காசோலை எண் 8877828-ஐ (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) வழங்கியதோடு, வாதிக்கு உறுதியான நம்பிக்கையையும், வாதி எங்களிடம் இருந்து வரவேண்டிய தொகையை நிச்சயமாகப் பெறுவார் என்ற உறுதியையும் அளித்து, அதில் குறிப்பிடப்பட்ட தேதியில் வாதியால் மேற்படி காசோலை வைப்பீடு செய்யப்பட்டது.. "இவ்வழக்கின் வாதியும் பிரதிவாதியும் சம்மந்திபோல் ஒரு குடும்ப உறவினராக இருந்து வந்ததால், அவர் வாதியின் தேவைக்கேற்ப 16.1.2012-ஆம் தேதியன்று ஒரு தொகை கொடுத்துள்ளார். (வலியுறுத்திக் கூறப்பட்டது)

மேலும், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் செலுத்தப்பட்ட தொகையானது சன்மானமோ அல்லது கொடையோ இல்லையென மேல்முறையீட்டாளர் குறுக்கு சாரணையில் தெரிவித்துள்ளார்:

”குற்றஞ்சாட்டப்பட்டவர் கணக்குப்படி ரூ.20,00,000/ என்ற இத்தொகையை எனக்கு கொடுத்தார் என என்னால் கூறமுடியாது. குற்றஞ்சாட்டப்பட்டவர் இத்தொகையைச் சன்மானமாக/ கொடையாக வழங்கவில்லை.”

20. காசோலை தேதியிடப்படாதது என்பது முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரின் வாதமாகும். அதற்கு மாறாக காசோலை மார்ச் 17, 2014 என்ற தேதியிடப்பட்டது என்பது மேல்முறையீட்டாளரின் வாதமாகும். காசோலை தேதியிடப்படாததா? அல்லது மார்ச் 17, 2014 என தேதியிடப்பட்டதா? என்பது குறித்து கீழமை நீதிமன்றம் எந்த ஒரு காண்முடிவையும் பதியவில்லை. எனினும், கடன் பெறப்பட்ட நாளன்றுதான் காசோலை பிணையமாக முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் வழங்கப்பட்டதென அறுதியாகத் தீர்மானிக்கப்பட்டது. முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் செலுத்தப்பட்ட தொகை ரூ.4,09,315/-ஆனது, ரூபாய் இருபது இலட்சம் என்ற கடனின் ஒரு பகுதியாகச் செலுத்தப்பட்டதென கீழமை நீதிமன்றங்களாலும் உறுதிபட பதியப்பட்டது.மேல்முறையீட்டாளர் தன்னுடைய குறுக்கு விசாரணையில் அவர் தொகை ரூபாய் இருபது இலட்சத்தைக் கடன் வழங்கியபோது 'காசோலைக்கு மேல் காசோலை' வழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். இவ்வாறாக காசோலையானது தேதியிடப்படாததாயினும் அல்லது மார்ச் 17, 2014 என தேதியிடப்பட்டதாயினும், அது கடனைத் தீர்க்கப் பிணையமாக வழங்கப்பட்டதென முடிவு செய்யப்படலாம். தொகை ரூ.4,09,315/-ஆனது 8 ஏப்ரல் 2012 மற்றும் 30 டிசம்பர் 2013 ஆகிய தேதிகளுக்கு இடையில் செலுத்தப்பட்டது என்பதாலேயே, அது 2014-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் தேதிக்குப் பிறகு, தொகையானது கடன் தொகையான ரூபாய் இருபது இலட்சத்தைத் தீர்க்கும் ஒரு பகுதியாகச் செலுத்தப்படவில்லையென முடிவு செய்யமுடியாது.முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு கடன் வழங்கப்பட்ட பின்னரே தொகை ரூ.4,09,315/-செலுத்தப்பட்டது. மேல்முறையீட்டாளர், தனது குறுக்கு விசாரணையில் ரூ.4,09,315/-ஐ பெற்றுக்கொண்டதை மறுக்கவில்லை. அதை சன்மானமாகவோ அல்லது கொடையாகவோ பெறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.மேற்படி விவாதத்தின் அடிப்படையில், காசோலையைப் பணமாக்கும் சமயத்தில், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் பிணையமாக வழங்கப்பட்ட அக்காசோலையைப் பணமாக்கும்

சமயத்தில் எழுதப்பட்டிருந்த தொகையான ரூபாய் இருபது இலட்சம் கடன்பட்டிருக்கவில்லை.

21. உயர் நீதிமன்றமானது விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்கையில், மேல்முறையீட்டாளரால் விடுக்கப்பட்ட சட்ட அறிவிப்பானது சட்டப்படி செலுத்தத்தக்க கடன் தொகையைப் பிரதிபலிக்காததால், அது ஒரு முழு விபரமற்ற அறிவிப்பு எனத் தீர்மானித்தது.ராகுல் பில்டர்ஸ் -எதிர்- அரிஹந்த் பெர்ட்டிலைசர்ஸ் & கெமிக்கல்ஸ், 2008 (1) எம்.டபிள்யூ.என். (கிரிமினல்) டி.சி.சி. 160 (எஸ்.சி.) : 2007 (5) சி.டி.சி. 876 (எஸ்.சி.) : 2008 (2) எஸ்.சி.சி. 321 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரையைச் சார்வுற்று, அறிவிப்பு சரியான தொகையைப் பிரதிபலிக்கவில்லை என்பதால், சட்ட அறிவிப்பானது சட்டப்பிரிவு 138(ஆ)-இன் வரம்புரைக்கிணங்க அனுப்பப்படவில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. சட்டப்பிரிவு 138-இன் தேவை என்பது 'காசோலை தொகை' கோரும் சட்ட அறிவிப்பு அனுப்புவதாகும் என மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.சட்ட அறிவிப்பில், 'காசோலைத் தொகையான' ரூபாய் இருபது இலட்சம் செலுத்தக் கோரப்பட்டதால், அது சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றமாகப் பார்க்கப்படுகிறது என வாதிடப்பட்டது.

22. காசோலை வங்கியால் நிதியின்மையால் செலுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்படுமெனில், காசோலை வரைபவர், சட்டப்பிரிவு 138-இன் கீழ் குற்றம் புரிந்தவராக கருதப்பட வேண்டும் என சட்டப்பிரிவு 138 வரையறுக்கிறது. எனினும், சட்டப்பிரிவு 138-இன் வரம்புரைகளின் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படும்போதுதான் , அதன் கீழான குற்றம் ஈர்க்கப்படுகிறது.சட்டப்பிரிவு 138-இன் வரம்புரை (ஆ) கூறுவதாவது, 'சொல்லப்பட்ட பணத்தொகையைச்' செலுத்தக் கோரும் அறிவிப்பு, காசோலைப் பெற்றவரால் அனுப்பப்படவேண்டும்.

23. சட்டப்பிரிவு 138-இன் வரம்புரை (ஆ)-இல் காணப்படுவதுபோன்று இந்நீதிமன்றம், 'சொல்லப்பட்ட பணத் தொகை' என்னும் சொற்றொடரை பொருள்விளக்கியுள்ளது.சுமன் சேத்தி -எதிர்- அஜய் கே. சூரிவால், 2000 (2) எஸ்.சி.சி. 38

என்ற வழக்கில் மேல்முறையீட்டாளர், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரூபாய் இருபது இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.அது மதிப்பு மறுக்கப்பட்டது. காசோலைத் தொகைக்கும் கூடுதலான தொகையைக் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டது.காசோலைத் தொகையான 'சொல்லப்பட்ட தொகையே' கோரப்படவேண்டும் என இந்நீதிமன்றத்தின் இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வு தீர்மானித்தது.காசோலைத் தொகைக்கும் கூடுதலான தொகையைக் கோரும் அறிவிப்பானது செல்லத்தக்கதா? என்னும் வினாவானது அறிவிப்பின் கருத்துநடையைச் சார்ந்ததாகும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

> ”8. அறிவிப்பானது முழுமையாக வாசிக்கப்படவேண்டும் என்பது நன்கு தீர்வு செய்யப்பட்ட சட்டக்கோட்பாடாகும்.அறிவிப்பில் "சொல்லப்பட்ட தொகையை” அதாவது, காசோலைத் தொகையை கோரியிருக்கவேண்டும்.அத்தகைய கோரிக்கை வைக்கப்படவில்லையெனில், அறிவிப்பானது அதன் சட்டப்படியான தேவையைப் பூர்த்திசெய்வதில் குறைபடும் என்பதில் ஐயமில்லை. "சொல்லப்பட்ட தொகையோடு” வட்டி மற்றும் செலவுத் தொகை போன்றவையும் கோரப்படுமிடத்து, அறிவிப்பு குறைபாடானதா? என்பது அறிவிப்பின் கருத்துநடையைச் சார்ந்திருக்கும். அறிவிப்பில் காசோலைத் தொகை, வட்டி மற்றும் இழப்பீடு போன்றவற்றை தனித்தனி கூறாகக் குறிப்பிடுகையில், வட்டி, செலவுத் தொகை போன்ற அத்தகைய பிற கோரிக்கைகள் மிகைப்படியானதாக இருக்கும், இக்கூடுதல் கோரிக்கைகள் தனித்தனியாகப் பிரித்துக்காட்டத்தக்கவை, அவை அறிவிப்பைச் செல்லாததாக்காது.எனினும், மதிப்பு மறுக்கப்பட்ட காசோலையில் கொடுக்கவேண்டிய தொகை என்னவென்பதைக் குறிப்பிடாமல் அறிவிப்பில் சுருக்கமான கோரிக்கை வைக்கப்படுமெனில், அறிவிப்பு, சட்டத்தின் தேவைகளை நிறைவு செய்யத் தவறுவதோடு, அது சட்டப்படி செல்லாததாகக் கருதப்படலாம்.”

24. கே.ஆர். இந்திரா -எதிர்- டாக்டர் ஜி. ஆதிநாராயணா, 2003 (4) சி.டி.சி. 252 (எஸ்.சி.) : 2003 (8) எஸ்.சி.சி. 300 என்ற வழக்கில் அறிவிப்பு, காசோலைத் தொகை செலுத்தலைக் கோரவில்லை என்றாலும், கடன் தொகையை கோரியது எனத்

தீர்மானிக்கப்பட்டது.வரம்புரை (ஆ)-இன் நோக்கங்களுக்காக, மதிப்பு மறுக்கப்பட்ட காசோலையில் அடங்கியுள்ள தொகைதான் கோரப்படவேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.(மேற்படி) ராகுல் பில்டர்ஸ் என்ற வழக்கில் காசோலைப் பெற்றவர் ரூ.8,72,409/-ஐ கோரினார். அது, காசோலையில் எழுதப்பட்ட தொகையான ரூ.1,00,000/-ஐ விட கூடுதலானதாகும். வரம்புரை (ஆ)-இல் உள்ள 'சொல்லப்பட்ட தொகையைச் செலுத்துதல்' என்னும் சொற்றொடர், காசோலைத் தொகையைக் குறிக்கும் என்பது வலியுறுத்தப்பட்டது.காசோலைத் தொகை, கூடுதல் தொகைக்கான கோரிக்கையிலிருந்து பிரித்துக்காட்டப்படமுடியாது என்பதையடுத்து, அறிவிப்பில் உள்ள கோரிக்கையும் பிரிக்கப்படாது என்பதால், அது ஒரு முழு விபரமற்ற அறிவிப்பு எனத் தீர்மானிக்கப்பட்டது.இந்நீதிமன்றத்தின் இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வுக்காக தீர்ப்பு எழுதிய மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ்.பி. சின்ஹா அவர்கள் கருத்துத் தெரிவித்ததாவது:

> ”10. [...] நிபந்தனைகளுள் ஒன்று, "சொல்லப்பட்ட பணத்தொகையைச் செலுத்துதல்" என்னும் சொற்றொடரிலிருந்து தெரிவதைப்போன்று, காசோலைத் தொகையைச் செலுத்தக் கோரி அறிவிப்பு அனுப்புதலாகும். [...] கூறவேண்டிய ஒன்று யாதெனில், கோரிக்கையானது காசோலையின் கீழ் செலுத்தப்படாத தொகையை மட்டுமின்றி, செலவுத் தொகை மற்றும் வட்டி போன்ற பிற தற்செயலான செலவுகளையும் குறிக்கலாம். ஆனால் அறிவிப்பு தெளிவற்றதாகவும் இரண்டு பொருள்விளக்கங்களை அளிக்கக்கூடியதாகவும் இருக்கும் என்று அர்த்தமல்ல.மதிப்பு மறுக்கப்பட்ட காசோலையின் கீழ் நிலுவைத் தொகை எது என்பதைக் குறிப்பிடாத ஒரு முழு விபரமற்ற அறிவிப்பானது, சட்டத்தின் தேவையை நிறைவு செய்யாது.1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் வழங்கிய காசோலைத் தொகையைச் செலுத்துமாறு அவர் கோரப்படவில்லை.செலுத்துமாறு கோரப்பட்டத் தொகையானது பற்றுசீட்டுகளின் நிலுவைத் தொகையான ரூ.8,72,409/- ஆகும். அந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும்படி அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தது.அதனைத் தொடர்ந்து, அது மொத்தத் தொகையான ரூ.8,72,409/-ஐ செலுத்தவேண்டும். முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட, 30.4.2000-ஆம் தேதியிடப்பட்ட காசோலைத் தொகையான ரூ.1,00,000/-ஐ

செலுத்துவதற்கான கோரிக்கை ஏதுமில்லை. எனவே, கோரப்பட்டத் தொகையானது மொத்தத் தொகையேயன்றி, அதன் ஒரு பகுதியல்ல."

25. பிரிவு 138-ஆனது அனுமானிக்கும் குற்றத்தை உருவாக்குகிறது. வரம்புரைகள், காசோலை வரைபவர்கள் அறிவிப்புக்கு பதிலளிக்கும் வாய்ப்பினையும், காசோலைத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் வாய்ப்பினையும் அளிப்பதன் மூலம் அவரை பாதுகாப்பதற்கான வரையறைகளைப் பரிந்துரைக்கிறது.வரம்புரைகளில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பிரிவு 138-இன் முதன்மை வகையத்திலுள்ள ஆக்கக்கூறுகளுடன் சேர்த்து நிறைவு செய்யப்படவேண்டும்.காசோலை பணமாக்கப்படும் சமயத்தில், சட்டப்படி செலுத்தத்தக்க தொகையைப் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பிரதிபலிக்கும் காசோலையானது வங்கியினால் பணம் செலுத்தப்படாமல் திருப்பப்படும்பொழுதுதான் பிரிவு 138-இன் கீழான குற்றம் எழுகிறதென ஏற்கெனவே மேலே முடிவு செய்யப்பட்டுள்ளது.காசோலை பணமாக்கப்படும் சமயத்தில், காசோலை சட்டப்படி செலுத்தத்தக்க தொகையைப் பிரதிபலிக்காவிட்டால், அது, பிரிவு 138-இன் கீழான குற்றமாவதில்லை.

26. காசோலையின் பகுதித் தொகை செலுத்தப்பட்டிருக்குமிடத்து, பிணையமாக வழங்கப்படும் காசோலையின் மதிப்பு மறுப்பு, பிரிவு 138-இன் வரம்பிற்குள் அடக்கப்படவில்லையெனில், சட்டப்பிரிவு 138-இன் நோக்கம் தகர்க்கப்பட்டுவிடும் என மேல்முறையீட்டாளர் வாதிடுகின்றார். காசோலை வரைபவர் கடன் தொகையில் ஒரு சிறு தொகையைச் செலுத்திவிட்டு, மீதத் தொகையைச் செலுத்தத் தவறுமிடத்து, சட்டப்பிரிவு 138-இன் கீழான வழக்கைத் தவிர்க்கும் சாத்தியத்திற்கு வழிவகுத்துவிடுமென வாதிடப்பட்டது.காசோலையில் குறிப்பிடப்பட்ட ஒரு தொகையின் பகுதி செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கான மேற்குறிப்பானது மாற்றுமுறையாவணத்தின் மீது இருக்குமெனில், பின்னர் அந்த முறையாவணம் எஞ்சியத் தொகைக்கு மாற்றப்படலாம் என பிரிவு 56 வரையறுக்கிறது. பிரிவு 56 கீழ்வருமாறு தெரிவிக்கிறது:

"56. கொடுபட வேண்டிய பணத் தொகையின் பகுதிக்கான மேற்குறிப்பு.- ஆவண மாற்றுதல் நோக்கத்திற்காக ஒரு மாற்றுமுறையாவணத்தின் மேல் எழுத்தப்பட்ட

எதுவும், அந்த முறையாவணத்தின் மேல் கொடுபட வேண்டியதாகத் தோன்றுகிற தொகையின் ஒரு பகுதியை மட்டுமே உரிமை மாற்றம் செய்வதாக அவ்வாறு எழுதப்பட்டது புலப்படுத்துமாயின், செல்லாததாகும். ஆனால், அத்தகைய தொகையின் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருக்குமிடத்து, அந்த முறையாவணத்தின் மேல், அந்தப்படிக்கான குறிப்பு ஒன்று மேற்குறிப்பெழுதப்படலாம்; அதன் பின்பு மீதித் தொகைக்காக அது ஆவண மாற்றுதல் செய்யப்படலாம்."

27. பிரிவு 15, 'மேற்குறிப்பு' என்னும் சொற்றொடரை பின்வருமாறு வரையறுக்கிறது:

"15. மேற்குறிப்பு.- ஒரு மாற்றுமுறையாவணத்தை எழுதுநர் அல்லது கைக்கொண்டிருப்பவர் அவ்வாறு எழுதுநர் என்றல்லாமல், பிறவாறாக ஆவண மாற்றுதல் நோக்கத்திற்காக, அதன் பின்புறத்தில் அல்லது அதன் முன்புறத்தில் அல்லது அதனோடு இணைக்கப்பட்ட ஒரு துண்டுத் தாளின் மேல் கையொப்பமிடுகிறபோது அல்லது அதே நோக்கத்திற்காக ஒரு முத்திரைத்தாளில் அதனை ஒரு மாற்றுமுறையாவணமாக்கும் உட்கருத்தோடு அவ்வாறு கையொப்பமிடுகிறபோது அவர் அதை மேற்குறிப்பு எழுதுவதாகக் கூறப்படுவார் மற்றும் "மேற்குறிப்பெழுதுநர்" என்றும் வழங்கப்பெறுவார்."

28. ஜோசப் சர்தோ -எதிர்- கோபிநாதன், 2008 (3) கே.எல்.ஜே. 784 என்ற வழக்கில் கேரள உயர் நீதிமன்றத்தின் கூட்டமர்வு தீர்மானித்துள்ளதாவது, "காசோலை பணமாக்கப்படுவதற்கு சமர்ப்பிக்கப்படும் நாளன்று அதில் பிரதிபலிக்கும் தொகையானது, அன்றைய நாளின் நிலுவைத் தொகையைவிடவும் கூடுதலாக இருந்தால், காசோலை வரைபவர் சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றத்திற்காக தண்டிக்கப்படமுடியாது என்பதாகும். அலையன்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர் பிராஜெக்ட் லிமிடெட் -எதிர்- வினய் மிட்டல், ஐ.எல்.ஆர். (2010) III தில்லி 459 என்ற வழக்கில் தில்லி உயர் நீதிமன்றமானது, அதே பிரச்சினைக்கு தீர்ப்புரை வழங்கியுள்ளது. காசோலை வரையப்பட்ட பின்னர், பகுதித் தொகை செலுத்தப்படுகிறபோது, சட்டப்பிரிவு 56-இன்படி தொகை செலுத்தப்படுபவர், குறைக்கப்பட்ட தொகைக்கு புதிய காசோலையைப்

பெற்றுக்கொள்வது அல்லது காசோலையின் மீது மேற்குறிப்பிடுவதன் மூலம் பகுதித் தொகையானது செலுத்தப்பட்டுவிட்டது என்பதை ஒப்புக்கொள்வது எனும் விருப்பத்தேர்வை கொண்டுள்ளார் என உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது. அறிவிப்பு அனுப்பப்படும் முன்னர். மொத்தத் தொகையின் ஒரு பகுதியைப் பெற்றபோதும் காசோலையில் பிரதிபலிக்கும் முழுத் தொகையையும் செலுத்துமாறு காசோலை வரைபவரைக் கோரும் அறிவிப்பு சட்டப்பிரிவு 138(ஆ)-இன் கீழ் செல்லத்தக்கதல்ல என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீ கார்ப்பரேஷன் -எதிர்- அனில்பாய் பூரன்பாய் பன்சால், 2018 (2) ஜி.எல்.ஹெச். 105 என்ற வழக்கில் குஜராத் உயர் நீதிமன்றத்தால் அதேபோன்றதொரு கருத்து எடுக்கப்பட்டது.

29. சட்டப்பிரிவு 56 உடன் பிரிவு 15-இன் கீழ் காசோலையில் பிரதிபலிக்கும் கடன் தொகையின் பகுதித் தொகைச் செலுத்தலை காசோலையில் பதிவதன் மூலமோ அல்லது அக்காசோலையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பில் மேற்குறிப்பிடலாம். அத்தகைய மேற்குறிப்பு செய்யப்படும்போது மீதித் தொகையைப் பணமாக்கிப்பெற, அந்த முறையாவணத்தை இன்னமும் பயன்படுத்தப்படமுடியும்.மேற்குறிப்பிடப்பட்ட காசோலையானது மீதித் தொகையைப் பணமாக்கப்படுவதற்கு சமர்ப்பிக்கப்படும்போது மதிப்பு மறுக்கப்படுமெனில், பின்னர் காசோலை பெற்றவர் சட்டப்பிரிவு 138-இன் வகையங்களின் துணை நாடலாம்.இவ்வாறாக, காசோலையானது வரையப்பட்ட பின்னர், ஆனால் அது பணமாக்கப்படுவதற்கு முன்னர் பகுதி கடன் தொகை செலுத்தப்படுகிறபோது அத்தகைய செலுத்துதலானது சட்டப்பிரிவு 56-இன் கீழ் காசோலையில் மேற்குறிப்பிடப்படவேண்டும். பகுதித் தொகைச் செலுத்தலைப் பதிவு செய்யாமல் காசோலை சமர்ப்பிக்கப்படமுடியாது. மேற்குறிப்பிடப்படாத காசோலை சமர்ப்பிக்கப்படும்போது மதிப்பு மறுக்கப்படுமெனில், காசோலை பணமாக்கப்படும் சமயத்தில் சட்டப்படி செலுத்தத்தக்க தொகையைப் பிரதிபலிக்காவிட்டால், சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றம் ஈர்க்கப்படாது.

30. மேற்படி விவாதத்தின் அடிப்படையில். நாங்கள் எங்கள் காண்முடிவுகளை கீழே தொகுத்தளிக்கின்றோம்:(i) சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றம் புரிவதற்காக. மதிப்பு

மறுக்கப்படும் காசோலை முதிர்ச்சியுறும் அல்லது சமர்ப்பிக்கப்படும் நாளன்று சட்டப்படி செலுத்தத்தக்க கடனைப் பிரதிபலிக்க வேண்டும்;

(ii) காசோலை வரைபவர். காசோலையானது வரையப்பட்ட காலத்திற்கும். முதிர்ச்சியின்பேரில் காசோலை பணமாக்கப்படுவதற்கான காலத்திற்குமிடையே கடன்தொகையின் பகுதி அல்லது மொத்தத் தொகையைச் செலுத்துவாரெனில், பின்னர் காசோலை முதிர்ச்சியுறும் நாளன்று சட்டப்படி செலுத்தத்தக்க கடன் தொகை, காசோலையில் பிரதிபலிக்கும் தொகையாக இருக்காது;

(iii) காசோலை வரைபவரால் காசோலையில் பிரதிபலிக்கும் தொகையின் ஒரு பகுதி அல்லது முழுத் தொகையும் செலுத்தப்படும்போது, அது சட்டப்பிரிவு 56-இல் பரிந்துரைக்கப்படுவதுபோன்று மேற்குறிப்பிடப்படவேண்டும். செலுத்தப்பட்ட தொகையுடன் மேற்குறிப்பிடப்பட்ட காசோலை, நிலுவைத் தொகையேதும் எஞ்சியிருப்பின் அதனைப் பணமாகப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்படலாம். மேற்குறிப்பிடப்பட்ட காசோலை முதிர்ச்சியின்பேரில் பணமாக்கப்பட கோரப்படுகிறபோது, மதிப்பு மறுக்கப்படுமெனில், சட்டப்பிரிவு 138-இன் கீழான குற்றம் ஈர்க்கப்படும்;

(iv) முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் கடன் பெற்ற பின்னர், காசோலை முதிர்ச்சியடைவதன்பேரில் பணமாக்கப்படுவதற்கு முன்னர் பகுதி தொகையைச் செலுத்தியுள்ளார். காசோலையில் எழுதப்பட்ட தொகையான ரூபாய் இருபது இலட்சம் முதிர்ச்சியுறும் நாளன்று 'சட்டப்படி செலுத்தத்தக்க கடன்' அல்ல. இவ்வாறாக காசோலை போதிய பணமின்மையால் மதிப்பு மறுக்கப்பட்டபோது, முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 138-இன் கீழ் குற்றம் புரிந்தவராகக் கருதப்படமுடியாது; மற்றும்.

(v) 'சொல்லப்பட்ட பணத்தொகையைச் செலுத்துதலைக்' கோரும் அறிவிப்பு, காசோலைத் தொகையையே குறிக்கிறது என்பதற்கு இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளால் பொருள்விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.பிரிவு 138-இன் வரம்புரைகளில்

வரையறுக்கபட்டுள்ள நிபந்தனைகள் பிரிவு 138-இன் முதன்மையான பகுதியில் கூறப்பட்டுள்ள ஆக்கக்கூறுகளுடன் சேர்த்து நிறைவேற்றப்படவேண்டும்.இவ்வழக்கில் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் பிரிவு 138-இன் கீழான குற்றம் புரியாததால், அறிவிப்பு முறையின் செல்லுந்தன்மை குறித்து முடிவு செய்யவேண்டியதில்லை.

31. மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக குஜராத் உயர் நீதிமன்றத்தின் 2022-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரைக்கு எதிரான மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

32. ஏதேனும் விண்ணப்பம் அல்லது விண்ணப்பங்கள் நிலுவையிலிருப்பின், அவை முடிக்கப்பெறுகின்றன.

**மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய். சந்திரசூட்**

**மாண்புமிகு நீதியரசர் ஹிமா கோலி**

புது தில்லி;

11.10.2022